செய்தி வெளியீடு எண்.550

**கூட்டுறவு, உணவு**
**மற்றும் நுகர்வோர்**
**பாதுகாப்புத்துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை–9.**
**நாள். 24.8.2007**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களுக்கும் அவர்கள் தனியாக சமையல் செய்பவராக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன, அதேபோன்று தகுதியுள்ள அரவாணிகள் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிக்கும் மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு அவர்கள் தனியாக சமையல் செய்பவர்கள்ாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரவாணிகளை சமூக அந்தஸ்திலிருந்து பிரிக்காமல் அவர்களுக்கும் ஏனையோருக்கும் வழங்கப்படுவது போன்று பொது குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரவாணி ஒருவர் தனி நபராக இருந்தால் கூட அவர் சமையல் செய்வாரேயானால் அவருக்கும் பாகுபாடின்றி மற்றவர்களுக்கு குடும்ப அட்டை வழங்குவது போல் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இருப்பினும், அரவாணிகளுக்கு குடும்ப அட்டை வழங்கப்படுவதில்லை என்று வரப்பெற்ற புகார்களை அடுத்து, அரசு அரவாணிகளிடமிருந்து குடும்ப அட்டை கோரி வரப்பெறும் மனுக்களை உடனடியாக விசாரணை செய்து அவர்களது தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கவேண்டும் என்று உத்திரவிட்டுள்ளது.

சு. மச்சேந்திரநாதன்,
அரசு செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9